ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்

சிதானந்த தபோவனம் ஸ்தாபகர்

# ஓங்காரானந்த சரஸ்வதி சரிதம்


(1924.07.13 - 2004.11.20)



ஆரையூர் அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கங்கள் பக்கம்


- ஆசிச்செய்தி - பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா 01
- சீடர்களின் ஆசிச் செய்தி 02
- முன்னுரை - ஆரையூர் அருள் 03
- சுவாமி ஓங்காரானந்த ஈஸ்வரர் 06 - 17
  - ❖ சுவாமியின் பிறப்பும் குடும்பச் சூழலும் 07 - 09
  - ❖ சுவாமியின் துறவு வாழ்க்கையும் சேவையும் 10 - 14
  - ❖ சுவாமியின் சமாதி நிலை 15 - 16
- சுவாமி ஓங்காரானந்த ஈஸ்வரர் திருப்பள்ளியெழுச்சி 17 - 18
- ஈழத்து திருச்செந்தூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி 19 - 20
- ஈழத்து திருச்செந்தூர் முருகன் கும்மிப்பாடல்கள் 21 - 24
- ஈழத்து திருச்செந்தூர் முருகன் காவடிப்பாடல்கள் 25 - 27
- ஈழத்து திருச்செந்தூர் முருகன் பக்திப்பாடல்கள் 28 - 32
- ஈழத்து திருச்செந்தூர் முருகன் பஜனைப்பாடல் 33 - 35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

## பிரமச்சாரி ஜாக்ரத் சைதன்யா அவர்களின் ஆசிச்செய்தி

சின்மயா ஆச்சிரமம்,
ராம்போட.
**15/11/2010.**

ஹரி ஓம்

ஈழத்திலே, மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரினிலே, திருச்செந்தூர் எனும் புனித பூமியில் முருகப் பெருமானிற்கு ஆலயம் அமைத்து சுவாமி சிவானந்தரின் வழிவந்த சிதானந்த தபோவனத்தையும் அமைத்து மானிட வர்க்கத்திற்கு பெரும் பணி ஆற்றிய ஒரு மகான் தான் சுவாமிஜீ ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள்.

அவருடைய வாழ்க்கை மிகவும் எளிமையானது; அமைதியானது; தூய்மையானது. அப்படிப்பட்ட அந்த மகானின் வாழ்க்கை வரலாறை ஒரு நூலாக அவருடைய ஆறாவது மகாசமாதி தினத்தில் ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயமானது வெளிக்கொண்டு வருவதை இட்டு அடியேன் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நூலானது ஆன்மீக சாதகர்களிற்கு வழிகாட்டியாகவும், உத்வேகத்தை கொடுக்கக்கூடியதாகவும் அமையும் என்பதில் ஐயம் இல்லை. எல்லாம் வல்ல இறைவனும் பூஜ்யகுருதேவர் சுவாமி சின்மயானந்தரும் எங்கள் எல்லோரையும் ஆசிர்வதிக்க அடியேன் பிரார்த்திக்கின்றேன்.

ஹரி ஓம்

என்றும் இறைபணியில்,
பிரமச்சாரி ஜாக்ரத் சைதன்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

## சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களின் சீடர்களின்

## வாழ்த்துச் செய்தி

### ஹரி ஓம்

சுவாமி சமாதியடைந்து ஆறாம் ஆண்டு நினைவை குறிக்கு முகமாக சுவாமிஜீ அவர்களின் சரிதை மலராக வெளி வருவதில் மகிழ்வடைகின்றோம். அவர் வாழ்ந்து காட்டிய பாதை எம்மை மிகவும் கவர்ந்தவை. அமைதி, சுயஅடக்கம், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, விவேகம், அறிவு மற்றும் ஆத்திகம் இத்தன்மைகள் யாவும் சுவாமிஜீ அவர்களிடம் மிக அதிகமாகக் காணப்பட்டது.

மௌனமே அருளின் உயர்ந்த வடிவம் அதுவே மிகச்சிறந்த ஆன்மீக உபதேசம். மௌனம் அனைத்திற்கும் மூலமாய் இருக்கின்றது. அது மனங்களை தூய்மை செய்கிறது. வாயை மட்டும் மூடிக் கொண்டு மனதை அலைபாய விட்டால் அந்த மௌனம் ஆற்றல் பெறாது. பலன் அளிக்காது. "நான்" என்கின்ற எண்ணம் துளியும் இல்லாது இருப்பதே மௌனம். அது தியானத்திற்கு உதவும். அதனை ஒரு விரதமாய் மேற்கொண்டு வாழ்ந்து காட்டியவர்.

சமயோசித புத்தி, நேரம் தவறாமை, சிக்கனம், ஹிந்து சமுதாய மதப்பற்று, மற்றும் சிற்பக்கலை ஆர்வம், ஆகியவை சுவாமிஜீ அவர்கள் எங்களுக்கு போதித்தவை.

எளிமையான வாழ்க்கை நடத்து, உண்மை பேசு, எல்லோரையும் நேசி, உன் காரியங்களில் எல்லாம் நேர்மையாக இரு உனக்கு தெய்வ தரிசனம் கிட்டும் என்று அடிக்கடி கூறுவார். இந்நூலின் நூல் ஆசிரியர் (ஆரையூர் அருள் ஐயாவுக்கு) எமது வாழ்த்துக்களைக் கூறி எங்கும் நிறைந்த உலகாளும் ஜெகதீசனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஹிந்து அனைவரும் சோதரரே
ஹிந்து எவருமே தாழ்ந்தவராகார்
ஹிந்துவை காப்பது எம் விரதம்
சரிசமானமே எமது மந்திரம்.

**ஹரிஓம்**

**என்றும் இறைபணியில்,**
**சி. வரத நிரோஷன்**
**சி. சிற்சபேஷின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# முன்னுரை

மட்டுநகர் மாதா நமக்கு ஈன்றளித்த மறக்க முடியாத மாபெரும் ஒப்பற்ற ஒரு துறவியின் ஞாபகம் எமது மக்களின் மனதில் என்றும் அழியாது நிலையாக நிற்பதற்கு அப் பெருந்தகையின் ஆன்மீக வாழ்வியலின் வரலாறுதனை சுருக்கமாகக் காட்டி நிற்கும் இது ஒரு சிறு நூலாகும்.

மட்டக்களப்பு தமிழகத்தில் தோன்றிய துறவிகளுள் ஆன்மீகத் தொண்டாற்றிய சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களின் இவ்வரலாற்று நூலினை எழுத்துருவில் வடித்து தரும் படி சுவாமிகளின் சீடர்கள் அன்பாகக் கேட்டுக் கொண்ட பொழுது ஒரு கணம் தயங்கினேன். பின் சுவாமியின் சித்தமிருப்பின் அதனை செய்ய முயற்சிக்கின்றேன் எனக் கூறினேன். சுவாமிஜீயின் வாழ்க்கை வரலாற்றினையும் சுவாமி கூறியவற்றையும் அவருடன் இருந்து பெற்ற அனுபவங்களையும் படி முறையாக அவர்கள் கூறிய பின்னர் எனக்குள் ஒரு தைரிய உணர்வு ஊற்றெடுப்பதை சுவாமி அவர்களின் அருள் உணர்வால் பெற்று இந்நூலை நூலுருவாக்க முயன்று நிற்கின்றேன்.

இந்நூல் வெளி வர ஊக்கமும் உறுதியும் தந்த இறை பணியில் ஈடுபட்டுள்ள சின்னப்பு நிரோசன், சின்னப்பு சபேசன் அவர்களின் தூய தொண்டு உள்ளங்களுக்கும் இந்நூலுக்கு ஆசிச் செய்தி வழங்கிய பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா அவர்களிற்கும் இந்நூலுக்கான ஆக்கங்கள் யாவற்றையும் கணனியில் வடிவமைத்து உதவிய திரு.சிவலிங்கம் வசிதரன் (வியாபார நிர்வாகப் பட்டதாரி ஆசிரியர்) அவர்களுக்கும் நூல் வெளிவர ஆலோசனை நல்கிய அதிபர் திரு.மா.தங்கவடிவேல் அவர்களுக்கும் சுவாமிஜீயின் அருளாசி கிடைக்க பிரார்த்தித்து இந்நூலை சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களது பாத கமலங்களில் சமர்ப்பணம் செய்கின்றேன்.

வாழ்க ஓங்காரானந்த ஈஸ்வரர் திருநாமம்!
வளர்க அவரின் திருப்பணியின் தொண்டென்றும்!

***ஓம் தத் ஸத்!***

இறைபணியில்.,
ஆரையூர் அருள்
19.09.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரி ஓம்

## உடலால் சமாதியாகி உணர்வால் எம்முடன் வாழும் புனிதர்

20.11.2004 ல் இறை நாமத்தை உச்சரித்தே இறைபதம் அடைந்த சுவாமிஜீ அவர்கள் உத்தம துறவியாக வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் ஐக்கியமாகி விட்ட புனிதர். மக்கள் அனைவரும் ஆண்டவனின் அருளினால் இன்புற்றிருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கிற்காக ஆன்மாக்கள் ஆண்டவனிடம் லயித்திருக்க ஓர் ஆலயத்தை தன் அயராத முயற்சியால் கட்டித்தந்தார். அவரது ஒவ்வொரு மூச்சும் ஆலய வளர்ச்சிக்கும் , ஆன்மீக வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது என்பது யாராலுமே மறுக்க முடியாத உண்மையாகும்.

பள்ளிப் பருவத்தில் நாவலடியில் இருந்து பாடசாலைக்கு செல்லும் வழியில் ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் என்ற பதாதை அழகிய செந்தூர் முருகன் வடிவமைப்புடன் அழகாக காட்சியளித்தது. உள்ளே ஆலயம் கொட்டிலால் அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் சிதானந்த தபோவனம் ஒன்றையும் அமைத்து ஊன் உறக்கமின்றி காலத்தை பொன்னாக மதித்து பாடு படுவதை காணக்கூடியதாக இருக்கும்.

சுவாமிஜீ ஓங்காரானந்த சரஸ்வதி சுறுசுறுப்பும், சாந்தம் தவழும் வதனமும், கனிவான மொழிகளும், தூய பக்தியும், மங்களமான காவியுடையும், குழந்தை உள்ளமும் எல்லோரையும் கவர்ந்து மதிப்பையும் ,மரியாதையையும், பக்தியையும் கொள்ளச் செய்தது.

அறநெறி கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவராக நியமித்ததுடன் சமாதியடைவதற்கு முன் இறுதி நாளில் ஓர் தாயாக உணவூட்டும் பாக்கியத்தையும் பெற்றதற்கு மகிழ்வடைகின்றேன்.

ஆலயப்பணி பாரியபணியாக இருந்த போதிலும் தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தை படிப்படியாக கட்டி முடித்து நிறைவு கண்டு கும்பாபிஷேகம் செய்து தினப்பூசை, செவ்வாய் நேர்முக தரிசனம், பூரணைப்பூசை, கண்திறப்புவிழா மற்றும் உற்சவங்களும் செய்து சிறப்பித்தார்.

பூசையின் போது சமஸ்கிருத மொழியில் கூறப்படும் அர்ச்சனைகளைத் தவிர்த்து ஓம் சிவக்கனலே ஓம் சுத்தஜோதி என ஆரம்பிக்கும் முருகன் அர்ச்சனையை அழகிய தமிழில் அனைத்து பக்த அடியார்களின் கரங்களில் மலரைக் கொடுத்து ஒற்றுமையாக கூட்டாக செய்ய வைத்தார். ஆன்மீக சொற்பொழிவுகள் சிந்தனையை தூண்டக் கூடியதாகச் செய்ததுடன் சிறுபிள்ளைகளின் காவடியாட்டம், நாடகங்கள், சமயப் பேச்சுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து சிறப்புக்கண்டு மகிழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய சித்திர சிற்பத்தேர் ,ஒன்றினை செய்து தேரோட்டம் நிகழ்த்த வேண்டுமென்ற கனவை நனவாக்கி வெள்ளோட்டம் விட்டு தொடர்ந்து உற்சவ இறுதி நாளில் தேர்பவனியை திரண்ட மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து தேரில் முருகப்பெருமானுடன் அமர்ந்து வடம் பிடிக்கும் மக்கள் வாழ்வு தடம் பிரழாது என்ற பூரிப்புடன் பவனி வந்தார். ஓர் கர்ம யோகியாகவே காட்சியளித்தார்.

சுவாமிஜீ அவர்களின் முக்கிய நோக்கம் தன்னைப்போன்ற துறவிகள் தான் தனக்குப் பின்னால் இவ்வாலயத்தை வழிநடத்த வேண்டும் என்ற எண்ணத்தால் இளமையில் சிறிய பிள்ளைகளைச் சேர்த்து தீட்சையளித்து ஆன்மீகம் , துறவறப் பயிற்சிகளை அளித்து கற்பித்து உபதேசங்கள் செய்து பிற்கால பூசகர்களாக பூசை செய்வதற்கு வழிவகுத்துச் சென்றுள்ளார். அதுமட்டுமன்றி பஜனை நிகழ்வுகள் , அறநெறி சமய வகுப்புகளை ஒழுங்கு செய்து சிறந்த முறையில் நடத்தி வந்தார்.

அடியார்கள் வந்து தங்கிச் செல்வதற்கு வேண்டிய மடங்களையும், அன்னதானங்களையும் வழங்கி வரும் மக்களை உபசரிப்பதிலும் வருவோரிடம் அன்பாய் பேசி சுகதுக்கங்களை பகிர்ந்து ஆலோசனைகள் கூறி மக்களை வழி நடத்துபவராக காணப்பட்டதுடன் ஓர் தீர்க்க தரிசியாகவும் மிளிர்ந்தார்.

புனித வாழ்வு வாழ்ந்து தான் பெற்ற இன்பம் பெறுக வையகம் என்பதற்கு இணங்க ஆன்ம ஈடேற்றத்திற்கான வழி வகை பல கூறி இறை பதமடைந்த சுவாமிஜீ அவர்கள் இறைவனுடன் ஐக்கியமாகி சமாதியடைந்து இன்றுடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்றது. உத்தமரின் தூய உடலே சமாதியானது . சுவாமிஜீ என்றும் போல் எம்முடன் இருந்து வழிகாட்டுகின்றார் என்பதையுணர்ந்து சைவமும் தமிழும் தரணியில் ஓங்க மக்களனைவரும் ஒன்று சேர்ந்து சுவாமிஜீயின் அருளால் ஒளிரும் தெய்வீகத் தன்மையையால் எம்மை வழிநடத்த வேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி சாந்தி !

சுந்தரமதி – வேதநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஓங்காரானந்தஜீ சரஸ்வதி மகராஜ்

கால ஞான தத்துவம் காட்டி நிற்கும் வித்தகத்தின் படி, கலியுகத்தில் பேராசை பெருகி பாவம் மலிந்து, மனிதம் மரித்து, தருமம் தலை குனிந்து, அதர்மம் தலை நிமிர்ந்து, நீதி அநீதியாகி, அநீதி நீதியாகி, உண்மை பொய்யாகி, பொய் உண்மையாகி ஆத்மீகம் நாத்மீகமாகி, நாத்மீகம் ஆத்மீகமாகி, சமுதாய ஆத்மீகம், பண்பாடு, கலாச்சார விழுமியங்கள் தலை கீழாய்த் தாண்டவமாடும் வேளை தோறும், அவதார புருடர்கள் தோன்றி அதர்மத்தை அழித்துத் தருமத்தை ஸ்தாபிதம் செய்வது வழக்கம். இவ்வவதாரங்கள் முனிவர்கள், துறவிகள், சித்தர்கள், தேச . பக்தர்கள், மகான்கள் என பன்முகப்பட விரிவடைந்து கொண்டு செல்லும். அந்த வகையில் துறவறம் பூண்டு சாதி சமய மத மொழி வேறுபாடின்றி தான் பிறந்த வீடு, வாழ்ந்த சமூகம், ஊர், கிராமம், பிரதேசம் நாட்டுக்கென ஆத்மீக கல்வி, கலை, கலாச்சாரத் துறைகளில் கடமை புரிந்த, தேன் பாயும் சோலைக் கனி தரு மலர்த்தேன் சொரிந்து வண்டினங்கள் உண்டு திகட்ட மலர் மீது சிறகுலர்த்தும், பாயும் மீன பாடும் கானம் கேட்டு வித்தகர் விபுலாநந்தர் யாழ் நூலீன்ற, ஆடும் வாவி கடலோடு சங்கமித்து கை குலுக்கி மகிழும், மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்புத் தமிழகத்தில் பூத்த ஆத்மீகத் துறவு மலர்களுள் மூத்த மலராய்ப் பூத்து திக்கெட்டுமன்றி, உலக அரங்கிற்கும் ஆத்மீக அருள் பரப்பிய சுவாமி ஓங்காரானந்தஜீ சரஸ்வதி மகராஜின் ஆன்மீக வாழ்வு அளவிடற்கரிய அளவில் பெரியது. அது ஆன்மீக அடித்தள ஊற்றிலிருந்து பீறிட்டுப் பாயும் பிரவாகம், சுவாமி சித்தானந்த ஆத்மீக அட்சய கலசத்திலிருந்து பூத்துக் காய்த்துப் பழுத்ததோர் அமிர்தக்கனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமியின் பிறப்பும் குடும்பச் சூழலும்

1924ம் ஆண்டு யூலை மாதம் 13ந் திகதியன்று மட்டு மாதாவின் மடியாகிய நொச்சிமுனைக் கிராமத்திலே தெய்வ பக்தியில் சிறந்த கந்தையா சின்னமுத்துத் தம்பதிகளுக்கு பால் பொழியும் வெண் நிலவாய், பகலவனின் கதிரொளியாய் நாத்திக இருளகற்றும் ஆத்மீக விடிவெள்ளியாக, அவர்கள் செய்த பூர்வீக புண்ணிய பலனால் இரண்டாம் மகனாக எழில் மிகு இள ஞாயிறு எனச் சுவாமி ஓங்காரானந்தாஜீ உதயமானார். இவரைப் பெறுவதற்கு பெரும் பேறு பெற்ற இவரது தாய் தந்தையர் வைத்த இளமைப் பெயர் கணபதிப்பிள்ளை. இவருக்கு மூத்த சகோதரரான அண்ணன் முருகுப்பிள்ளை, தம்பிமார்களான மயில்வாகனம், பாலசுப்பிரமணியம், பவளகாந்தன் ஆகியோரும் சகோதரிகளான பாக்கியம், தங்கநாயகம் திருமஞ்சனமென குடும்ப மரம் கிளை பரப்பி விருட்சமானது. குழந்தைகளிடம் தெய்வ பக்தியை ஏற்படுத்துவது தாய் தந்தையின் தினசரி வழிபாடுகளில் உள்ளது என்பதற்கு, எடுத்துக் காட்டாக கணபதிப்பிள்ளை சிறுவயதிலிருந்தே பெற்றோர்கள் போன்று இறைவனிடம் மிகவும் பக்தியுடையவராகவே இருந்தார். துள்ளி விளையாடி கிள்ளை மொழிகளை அள்ளி வீசிய கணபதிப்பிள்ளை பள்ளி செல்லும் பருவமடைய தனது ஆரம்பக் கல்விதனை மட்/விவேகானந்தா பாடசாலையிலும், தொடர்ந்து தமது கல்வியை மட்/சிவானந்தா வித்தியாலயத்திலும் பயின்று வந்தார். அவ்விளமைப் பருவத்தில் படிக்கும் போதே ஆத்மீகத்தில் ஆழ்ந்த விருப்பும் ஈடுபாடும் துறவிகளிடம் தன்னையறியாத ஒரு பக்தியும், தானும் ஒரு துறவியாக வேண்டுமென்ற விருப்பமும் கணபதிப்பிள்ளையின் அடி மனதில் ஆழப்பதிந்திருப்பதனை உணர்ந்தார். அதனை ஈடேற்ற உறுதுணையாக அமைந்தது மட்/இராம கிருஸ்ண மிசன் இல்லம். பாடசாலை முடிவுற்ற பின், பின்னேரங்களில் இராம கிருஷ்ண மிசனுக்குச் சென்று அங்குள்ள துறவிகளுடன் சேர்ந்து ஐம்புலன்கள் வழியெழும் ஆசைக் குதிரைகளை தறிகெட்டுத் தன் இஷ்டப்படி செல்லாது அடக்கி ஒடுக்கித் தன் மனக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் கடிவாளங்களான யோகாசனம், தியானம், பஜனை போன்ற ஆத்மீக சிந்தனைத் தெளிவளிக்கும் ஔடதமான இச் செயற்பாடுகளில் அவருடைய இளமைக் காலத்தை இணைத்து ஈடுபட்டுக் கொண்டு இருந்தார். அவருடைய சிந்தனையில் உலகியல் வாழ்க்கை நிலையற்ற கானல் நீராகும் வாழ்க்கையின் குறிக்கோள் உலகியல் இன்பமல்ல. தாய், தந்தை, சகோதரர் உற்றார் உறவினர் ஆகியோரின் உறவென்பது தண்ணீர்த் தடாகங்களில் நீர் பருக வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடி பின்னர் தாகம் தீர்ந்ததும் நீர் நிலையை நீத்துச் செல்லும் விலங்குக் கூட்டம் போன்ற நிலையற்ற வாழ்வு என்று, இதயத்தின் ஊற்றுக்களிலிருந்து எழுந்த உணர்வுகள் உறுத்திக் கொண்டேயிருந்தன. தனது அண்ணன் முருகுப் பிள்ளை இளமையிலேயே இறைவனடி சேரத் தனது படிப்பை முடித்த கணபதிப்பிள்ளையின் மேல் குடும்பப் பொறுப்புகள் எல்லாம் சேர்ந்தது. சகோதர சகோதரிகளைப் படிப்பிக்கும் பொருட்டு முதன் முதலாக கடற்படைக் காரியாலயத்தில் இலிகிதராகச் சேர்ந்து, தனது குடும்பத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். சில வருடங்களின் பின் வேலை செய்யும் இடத்தில் சிரமங்கள் ஏற்பட, அம்பாறை ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை வேலைத் திட்டத்தின் கீழ் கண்டியில் இலிகிதர் வேலையைத் தொடர்ந்தார். ஆனால் கணபதிப்பிள்ளையின் ஆத்மீக தாகம் ஊற்றெடுத்துக் கொண்டேயிருந்தது. அதற்குத் தீனி கிடைத்தது போல, சில பெரியோர்கள் கூறிய படி கண்டியிலுள்ள தென்னங்கும்பராய் என்ற இடத்தில் சுவாமி இமயஜோதி சிவானந்தரின் சீடர் சச்சிதானந்த சுவாமியின் ஆச்சிரமம் உள்ளதை அறிந்தார். கணபதிப்பிள்ளை வேலை முடிந்ததும் பின்னேரத்தில் சச்சிதானந்த தபோவனத்தை அடைய அங்கு சச்சிதானந்த சுவாமியின் தரிசனம் கிடைத்தது. கணபதிப்பிள்ளை தன்னை அறிமுகப்படுத்தியதோடு அவரைப் பற்றிய விபரங்களையும் கேட்டறிந்து, தனது இலட்சியத்தையும் வெளிப்படுத்தினார். இவற்றையெல்லாம் கேட்ட சச்சிதானந்தர் துறவு வாழ்க்கையை மேற்கொள்வதாயின் எப்படியெல்லாம் வாழ வேண்டும் எவ்வெவ் வாழ்க்கை முறைகளையெல்லாம் கைக்கொள்ள வேண்டும். என்றும் துறவிக்கு ஆரம்ப நிலை பிரம்மச்சரியம் அதை நீங்கள் ஒழுங்காகக் கடைப் பிடிக்க வேண்டும். தன்னலம் பாராது சேவை செய். இயன்ற வரை இல்லையென்று சொல்லாது தானம் செய். மனதைத் தூய்மைப்படுத்து தினசரி தியானம் செய். ஆத்மானுபூதியடை என்பன போன்ற துறவியாகத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் என்று இமய ஜோதி சிவானந்தரின் போதனைகளைக் கூறிக் கணபதிப்பிள்ளையை விழிப்படையச் செய்தார். அன்று முதல் கணபதிப்பிள்ளை தனது ஆத்மார்த்த குருவாக இவரையே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மனதில் வரித்துக் கொண்டார். அதிகாலையில் துயிலெழுந்து ஆச்சிரமடைந்து சுவாமிகளுடன் இருந்து தியானம, யோகாசனம் ஆகியவற்றை செய்து முடித்த பின் சுவாமியிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னரே வேலைக்குச் செல்லுவதை வழக்கமாக்கிக் கொண்டார். கணபதிப்பிள்ளையின் ஆன்மீக வாழ்வு நாளாந்தம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அம்பாறையில் ஆற்றுப் பள்ளத்தாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் சபைக்கு இடமாற்றம் செய்து அனுப்பப்பட்ட கணபதிப்பிள்ளை சில காலம் அம்பாறையில் வேலை செய்து தனது இளைய சகோதரன் மயில்வாகனத்தைப் பிரபல ஒப்பந்தக்காரராக உருவாக்கிய பின், உலக வாழ்விலிருந்து விடுபட விளைந்த கணபதிப்பிள்ளை குடும்பப் பொறுப்புகள் யாவற்றையும் இளைய சகோதரரிடம் ஒப்படைத்து விட்டார். வேலை செய்யும் போதும் எல்லாவற்றிலும் வெறுப்புற்றவராய்த் தனிமையில் அமர்ந்திருந்து நீண்ட நேரத்திற்கு ஆழ்ந்த சிந்தனையில் திழைத்திருப்பார். நாம் இனியாருக்காக வேலை செய்ய வேண்டும் "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்ற பட்டினத்தடிகளின் வார்த்தை மனதில் பம்பரமாய்ச் சுழன்று கொண்டேயிருந்தது. நமக்கு இனி இங்கு வேலையில்லை. செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்று ஆத்மீக சாதனைகளைத் தொடங்குவோம் என்று முடிந்த முடிவுடன் ஒரு வார கால லீவுக்கு விண்ணப்பித்து விட்டு மட்டக்களப்பிலுள்ள தனது வீட்டிற்கு வந்து அவசர அவசரமாக இரண்டொரு உடுப்புகளையும் எடுத்துப் பையில் வைத்து விட்டு தனது தாயாரை அழைத்தார். அம்மாவுடன் அவரது மூத்த சகோதரியும் சமைத்துக் கொண்டிருந்தார்கள். அம்மா நான் அவசரமாகக் கண்டிக்குச் செல்கின்றேன். வருவதற்கு சில நாட்கள் ஆகலாம் என்று கூறியதும் "தம்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்று அன்னை கூற எனக்கு நேரமில்லையென்று கூறி விட்டு கணபதிப்பிள்ளை கண்டி நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஓம் தத் ஸத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவு வாழ்க்கையும் சேவையும்

கணபதிப்பிள்ளை பயணத்தின் பாதையிலும் பரிபூரணமாகத் தான் துறவியாக வேண்டும் தூய மனதுடன் சேவை புரிய வேண்டும் என்ற துடிப்பே தான் சென்ற பேருந்தின் வேகத்திலும் மிஞ்சியதாகவே நெஞ்சத்தின் நினைவலைகள் எனும் வேகம் முந்திக் கொண்டேயிருந்தது. சிந்தனைத் தெளிவெனும் தெளிந்த நிரோடையில் தனது சலனமற்ற துறவு எனும் தூய விம்பத்தையே காட்டிக் கொண்டிருக்க கண்டியைப் பேருந்து சென்றடைந்தது. கணபதிப்பிள்ளை கண்டி சச்சிதானந்த தபோவன்ததை அடைந்து துரித நடை பயின்று சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றார். சுவாமிகள் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருப்பதனைக் கண்ட கணபதிப்பிள்ளை அவரருகே சென்று தனது கைப் பையை வைத்து விட்டு சுவாமிகளின் தியானம் முடியும் வரைக்கும் தானும் தியானித்துக் கொண்டேயிருந்தார். தியானம் முடிந்து கண்மலர்ந்த சுவாமிகள் கணபதிப்பிள்ளையின் திருக்கோலத்தைக் கண்ணுற்றுக் கொண்டிருந்த வேளை கணபதிப்பிள்ளையோ சுவாமியின் திருப்பாதங்களைப் பணிந்து ஆசீர்வாதம் பெற்றுத் தனது வருகையைத் தெளிவுபடுத்தினார்.

சுவாமி நான் கணபதிப்பிள்ளை நொச்சிமுனை எனும் கிராமத்தில் இருந்து துறவியாவதற்காகத் தங்களை குருவாக ஏற்று நாடி வந்திருக்கிறேன். தயவு கூர்ந்து என்னை நீங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். எனது மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் தங்களையே குருவாக வரித்து விட்டேன் என்று அமைதியாகவும் அன்பாகவும் ஆனால் தெளிவாகவும் கூறினார். கணபதிப்பிள்ளையின் பக்குவ நிலை, திடம் உறுதி கண்ட சுவாமிகள் உன்னுடைய துறவு வாழ்வு சிறப்புற அமைய இறைவன் இன்னருள் சுரப்பாராக என்ற எண்ணக்கருத்தை எடுத்துரைத்து நல்லாசி கூறி ஆசீர்வதித்தார். அன்றைய நாள் அன்றைய நாள் கணபதிப்பிள்ளைக்கு ஆனந்த அருவி கரை கடந்து புரண்டோடிய இன்ப நாளாகவே இதயம் இனித்தது. உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கியிருந்த கணபதிப்பிள்ளை துறவிக்கு இவ்வித உயர்வுகள் கூடாதென சடுதியாக உணர்ந்து அதிலிருந்து விடுபட்டு அன்றைய தினமே அம்மா நான் கண்டியில் சச்சிதானந்த தபோவனத்தில் துறவியாகச் சேர்ந்து விட்டேன். என்னைத் தேட வேண்டாம். என ஒரு மடல் வரைந்து அனுப்பி வைத்தார். 1956ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது முப்பத்திரெண்டாம் வயதில் பட்டம் பதவி பெற்றோர் உற்றார், உறவினர் எல்லாவற்றையுமே துறந்து சுவாமி சச்சிதானந்தர் ஆசீர்வாதம் பெற்று பிரம்மச்சாரி ஓங்கார சைத்தன்யர் என்ற நாமத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். சிறு வயதிலிருந்தே கணபதிப்பிள்ளை தனது இஷ்ட தெய்வமாக நாராயணனையே இதயத்தில் ஏற்றி ஓம் நாராயணா எனத் அதை தினமும் மனதை ஒடுக்கி உள்ளத்தினுள் உச்சரித்துக் கொண்டே பிரம்மச்சிரிய தீட்சை பெற்று ஆத்மீக சாதனைகளைச் செய்யத் தொடங்கினார்.

1958 இல் இந்தியாவிற்குத் தல யாத்திரை மேற் கொண்டு பல முக்கிய விசேட ஷேத்திரங்களையும் தரிசித்து இறையருள் பெற்று மனம் கனிவுற்று ஆன்மிகச் சேவையாற்றும் செயல் திறனோடு இலங்கைத் திருநாடு திரும்பினார். 1959ல் மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற சமாதானப் பிரார்த்தனையில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சாந்தி, சமாதானம் வேண்டிப் பிராத்தித்தார். மறு நாள் மட்டு நகர் கோட்டைமுனை மகா மாரியம்பாள் ஆலயத்தில் ஓங்காரானந்தா சைத்தன்யருக்கு விசேட வரவேற்பு நடைபெற்றது. வரவேற்பில் பங்கு பற்றிய பெரியயோர்கள் முதல் சிறுவர்கள் வரை சுவாமியவர்களைத் தொடர்ந்தும் மட்டக்களப்பில் தங்கியிருந்து ஆத்மீகப் பணிகளைத் செய்ய வேண்டும் என அன்பாக வேண்டுகோள் விடுத்தனர். அவர்களின் அன்புக் கட்டளையை இதயமாக ஏற்று சம்மாதித்து மட்டக்களப்பிலேயே ஒரு நிரந்தரமான ஆச்சிரமம் அமைத்து அதிலிருந்து கொண்டே ஆத்மீகப் பணியாற்ற ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். மட்டக்களப்பு கோட்டைமுனை பொற்றொழிலாளர் வீதியில் ஒரு வருடத்திற்குள் கட்டட வேலைகள் எல்லாம் துரிதமாக நடைபெற்று தெய்வ நெறிக் கழகம் எனப் பெயரிட்டு 1961ம் ஆண்டு திறப்பு விழாச் செய்து பணிகளை ஆரம்பித்தார். 1965இல் சச்சிதானந்த சுவாமிகளின் ஆசியுடன் இந்திய ரிஷி கேஷம் சென்று இமய சோதி சுவாமி சிவானந்தரின் மூத்த சீடரான சுவாமி சிதானந்த சரஸ்வதியிடம் சன்னியாச தீட்சைப் பெற்று சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி என்ற நாமத்துடன் சுவாமி சிவானந்தரின் உருவச் சிலையும் அவருடய பாதுகையும் கங்கா தீர்த்தமும் ரிஷி கேஷியர்களோடு மட்டக்களப்பிற்கு கொண்டு வரப்பட்டு பக்தர்கள் தரிசனத்தோடு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தெய்வ நெறிக் கழகத்தில் சுவாமி சிவானந்திரின் உருவச் சிலைக்கு கங்கா தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து பிரதிஸ்டை செய்து ஸ்ரீ சிவானந்த ஆச்சிரமம் என்று பெயரும் சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களாலேயே நிறுவப்பட்டது. அங்கிருந்து கொண்டே மட்டக்களப்பு கல்லடியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.இராஜதுரை அனுசரணையுடன் பெற்ற காணியில் தனது சன்னியாச குருவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவானந்தரின் பெயரில் சிவானந்த தபோவனம் அமைத்து ஆத்மீகத்திற்காக அரும்பணி ஆற்றி வந்தார்.

1961 மாசி மகா சிவராத்திரிக்கு முன் தினமிரவு மட்டு நகர் சிவானந்தா ஆச்சிரமத்தில் அறுதுயிலில் ஆழ்ந்திருந்த போது கனவில் கல்லடித் தபோவனக் காட்சி விரிந்தது. அங்கு நின்ற ஒற்றைப் பனை மரம் மட்டுமே தோன்றியது. அப் பனை மர நிழலில் காவியுடை தரித்த துறவியொருவர் அமர்ந்திருந்தார். அவசர அவசரமாக அவரருகே சென்ற துறவி ஓங்காரானந்தா சுவாமி! நீங்கள் யார்? எப்போது? எதற்காக? ஏன்? இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு என்னுடைய எத்தகைய உதவிகள் வேண்டும்? என வில்லில் இருந்து புறப்படும் அம்புகள் போல சொல்லம்புகளைத் தொடுத்த சுவாமியை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்த துறவி புன்முறுவலுடன் இன்முகம் காட்டி இனிமையான தள தளத்த குரலில் அத்தனை கேள்விகளுக்கும் முத்தாரமாக கடலை நோக்கிக் கரம் நீட்டி “தென்னாட்டுத் திருச்செந்தூரிலிருந்து கதிர்காமம் செல்ல வழக்கமாக வரும் நான், இவ்விடம் ஓய்வெடுத்துச் செல்வது வழக்கம், நீ இங்கு எனக்கோர் ஓலைக் கொட்டிலாவது கட்டி விட்டால் சில நாட்களில் ஓய்வெடுத்துச் செல்ல முடியும்”. முடிந்தால் அதைச் செய்யென்று கூற சுவாமி கனவு நிலையிலிருந்து நினைவு நிலைக்கு வந்து விட்டார். முருகப் பெருமான் தான் கனவில் காட்சி தந்து கட்டளையிட்டு ஒரு பணியையும் முடிக்கும் படி பணித்துள்ளார். துறவியாக முருகன் அமர்ந்த இடத்தில் ஓர் ஆலயம் அமைக்க உறுதி பூண்டார். உடனடியாக வேலை செய்வதென்பது முடியாத காரியம். ஆச்சிரமத்தை சுற்றி வந்தார். அங்கே ஓர் அழகான கருங்கல்லை எடுத்து உளி சுத்தியல் கொண்டு ஒரு பிள்ளையார் உருவத்தை கல்லில் வடிவமைத்து கடைக்குப் போய் கற்பூர அபிஷேகப் பொருட்களை வாங்கி பூக்களும் பறித்தெடுத்து சீமெந்தும் எடுத்துக் கொண்டு தனது சைக்கிளில் கடற்கரையில் கிடந்த சில சல்லிக் கற்களையும் பொறுக்கியெடுத்து வந்து பனை மரத்தடியில் முருகன் அமர்ந்த இடத்தில் ஓர் மேடையமைத்து அதன் மேல் கல்லை நிறுவி அபிஷேகப் பூசை, அர்ச்சனை, தீபாராதனை, மந்திர உச்சாடனம் செய்து முருகனை வழிபட்டு வந்தார்.

கவி யோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் இலங்கைக்கு வந்து மட்டு நகர் விஜயம் செய்த போது வேலொன்று செய்து அவ்விடத்தில் ஓலையால் ஓர் கோயில் கட்டி அவர் கையாலே வேலை பிரதிஸ்டை செய்து வைத்தார். சுவாமி ஓங்காரனந்தா சரஸ்வதி அன்றிலிருந்து ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் என அதனை அழைத்து வந்தார். சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவிலிருந்து வந்த சிற்பாச்சாரியர்களைக் கொண்டு முருகன் சிலை செய்வித்து பிரதிஸ்டை செய்து சுவாமி ஓங்காரானந்தா சரஸ்வதி அவர்கள் தவறாது காலை 6.30க்குச் காலைப் பூசையும் நண்பகல் 12.00 மணிக்கு மதியப் பூசையும் பிற்பகல் 5.30 மணிக்கு மாலைப் பூசையும் செய்து வந்தார். மட்டு நகர் ஆச்சிரமத்திலிருந்து அதி காலை சைக்கிளிலே வந்து காலைப் பூசை முடித்து பின், தபோவனத்தில் பற் பல வேலைகளை தன் கரங்களினாலே தேனீ போன்று சுறு சுறுப்பாக சகல விதமான மேசன், கூலி, மேஸ்த்திரி, தச்சன், சிற்பி போன்ற வேலைகளை மிகவும் நுட்பமாகவும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் செய்யும் ஒரு சகலகலா வல்லவராகக் காணப்பட்டாலும், மிக எளிமையாகவே சுவாமி அவர்கள் எப்போதும் காணப்படுவார். மதிய சாப்பாட்டிற்குப் பின் ஒரு குட்டித் தூக்கம் செய்து எழுந்து தன் கடமைகளை செவ்வனே செய்யும் ஓர் கர்ம யோகியாகவே அவர் வாழ்ந்து வந்தார். மாலைப் பூசையின் பின் துண்டை விரித்துப் படுத்துக் கிடந்து ஆலயத்திற்கு வருபவர்களுடன் அன்பாக அளவளாவி சிறுவர்களுடன் மிகவும் பிரியமுடன் பழகி அவர்களுடன் விளையாடுவார். இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லாவுயிரும் ஓர்ருயிரென மதித்து நடக்கும் ஒரு மகானாகவே சுவாமி தன் வாழ் நாள் முழுவதும் வாழ்ந்து வந்தார். பிறரைத் தனக்காக வருந்த விடாத உயரிய பண்பு கொண்ட காரணத்தாலேயே, சகல காரியங்களையும் தனது துவிச்சக்கர வண்டியிலே சென்று முடிக்கும் ஆற்றல் திறன் மிக்க வல்லுனராக சுவாமி காணப்பட்டார்.

1978ம் ஆண்டு வீசிய சூறாவளியால் ஆலயம் இடிந்து தரைமட்டமாகியது. மீண்டும் ஓலைக் குடில் ஆலயம் அமைத்து பூசை வழிபாட்டினை மேற்கொண்டார். ஆனால் கல்லால் ஒருசிறு அறை கட்டியாவது சுவாமியை வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்கிய திருப்பணி 1980 ஒக்டோபர் 23இல் அடிக்கல் நாட்டு விழாவுடன் ஆரம்பமாகி கட்டிடப் பொறியியலாளரான திரு.எஸ்.சுப்பிரமணியம் விழா சிறப்புடன் நடை பெற உதவியதோடு, அன்றே ஒரு திருப்பணிச் சபையும் ஏற்படுத்தப்பட்டது. 1982ல் சுவாமி ஓங்காரானந்தா சரஸ்வதி அவர்கள் அமெரிக்கா சென்று "பொட்டரிக்கோ" என்ற இடத்தில் நடந்த அகில உலக யோக மகாநாட்டில் பங்குபற்றி "யோகப் பயிற்சி" "தியானத்துவம்" என்ற இரு தலைப்புகளிலும் சொற் பொழிவுகள் நிகழ்த்தி இலங்கைக்கும் இந்து மதத்திற்கும் குறிப்பாக மட்டுநகர் மாதாவிற்கும் உலக மேடையிலே ஓர் உயர்ந்த புகழைத் தேடிக் கொடுத்த ஒரு தெய்வ மகான் ஆவார். அதனை முடித்துக் கொண்டு கனடா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று பல நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றிய பின், இலங்கைத் திருநாட்டிற்குத் திரும்பினார்.

துவித தள விமானத்தைக் கொண்ட கற்பக் கிரகம் அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிர்தத மண்டபம், தம்ப மண்டபங்கள் யாவும் முடிவுற்று புதுப் பொலிவுடன் காட்சியளித்த ஆலயத்தின் முகப்பில் 1983.06.28 அன்று திருச் செந்தூர் முருகன் திருவுருவம் ஆலயத் தோற்றமும் ஓவியர் செல்வம் அவர்களால் வரையப்பட்டு நண்பகல் 12 மணிக்கு சாப்பிடச் சென்று வந்த பின்னரே முருகனின் கண்களைத் திறப்போம் என நினைத்துச் சென்று விட்டார். பிற்பகல் ஒரு மணிக்கு திரும்பி வந்தவர் கண்ட காட்சி அற்புதம், அதிசயம் ஆனால் உண்மை. இரு கண்களும் திறக்கப்பட்டது கண்டு வியந்து நிற்க மக்கள் கூடி முருகன் மகிமையை அறிந்து வணங்கி நின்றனர். இதனை நினைவு கூர்ந்து ஆண்டு தோறும் இத்தினத்தை கண் திறந்த விழாவென சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 1984.02.05ல் கோவில் கும்பாபிஷேகம் மிக விமர்சையாக நடை பெற்றது. அன்றிலிருந்து இந்து மதத் துறவிகளே ஆலய பூசைகள், ஆலய பராமரிப்பு யாவும் செய்ய வேண்டுமென்றும் சாதி, மத வேறுபாடின்றி எல்லோரும் மூலஸ்தானம் சென்று பூசை அர்ச்சனை யாவும் முடியுமான வரை தமிழில் செய்ய வேண்டுமென்றும் மக்களின் ஆத்மீக அறிவை வளர்க்கும் இடமாகவே இவ்வாலயம் விளங்க வேண்டும் என்றும், அபிஷேகத்திற்கான பூரண கும்பம் உட்பட அனைத்து கும்பங்களும் மக்கள் மூலஸ்தானம் எடுத்துச் சென்று விசேட விழா நாட்களில் மக்கள் நேரடியாகச் சென்று அர்ச்சனை செய்யும் முறை தொடர வேண்டும் எனக் கூறி நடைமுறைப்படுத்தி வந்தார்.

1986ம் ஆண்டில் சித்திரத் தேர் ஒன்றை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்தார்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.தியாகராஜா பரமசாமி அவர்களின் தலைமையில் தேர் கட்டும் பணிகள் ஆரம்பமாகின. இப் பணியில் பல்வேறு தனியாட்களும் நிறுவனங்களும் ஒத்துழைப்பினை வழங்கினார்கள். 2002.06.05ல் முதன் முதலாக அழகிய சித்திரத் தேரில் ஈழத்துத் திருச்செந்தூர் முருகப் பெருமான் தேரில் அமர்ந்து வீதி உலா வந்த காட்சி எல்லோரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது.

சுவாமிகள் தன்னுடைய சீடர்களிடம் தபோவனத்தில் இருக்கும் சீடர்களே திருச்செந்தூர் ஆலய பணிகளையும் பூசைகளையும் செய்து வரவேண்டும் என அடிக்கடி கூறுவார். இவ்வாறாக சுவாமிகளின் ஆத்மீக சேவைகள் விருத்தியடைந்து மக்கள் மத்தியில் ஓர் ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஓம் தத் ஸத்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளின் சமாதி நிலை

சுவாமியின் 80தாவது வயது பூர்தியடைந்ததும் எண்பத்தோதராவது வயதினிலே சுகயீனம் ஏற்பட்டு தளர்வடைந்திருந்தார். தனது சமாதி காலம் நெருங்கிக் கொண்டிருப்பதனை உணர்ந்த சுவாமிஜீ தன்னுடைய சீடர்களிடம் இரண்டுகைகளையும் காட்டி இந்தக் கைகளினால் செய்யப்பட வேண்டிய பணிகள் யாவும் இறைவனால் செய்விக்கப்பட்டன. மேலதிக பணிகளையும் ஆலய ஆச்சிரமப் பணிகளையும் இனி மேல் நீங்களே செய்ய வேண்டும் எனவும் கூறி ஆத்மீக சக்தி உள்ளவனிடம் தீய சக்தி எதுவம் நெருங்காது, ஒளி மயமான வாழ்க்கை நடத்து, உண்மை பேசு, எல்லோரையும் நேசி, உன் காரியங்களில் எல்லாம் நேர்மையாகவே இரு, உனக்குத் தெய்வ தரிசனம் கிட்டும். மனிதப் பிறவியின் நோக்கமே ஆன்மீக விடுதலை தான் என உபதேசம் செய்து வழி நடாத்த இறைவன் இருக்கின்றார் என ஆசீர்வதித்து சுவாமிஜீயினால் செய்யப்பட்ட அனைத்துப் பணிகளும் ஆச்சிரமம் ஆலய பரிபாலன சபையிடமும் சீடர்களிடமும் முழுப் பொறுப்புக்களையுமே ஒப்படைத்தார். நோய் வாய்ப்பட்டிருந்த வேளையிலும் நோயினால் எவ்வளவு கஸ்டபட்டாலும் சுவாமிஜீ அதனை மற்றவர்களிடம் காட்டிக் கொள்ளாமல் நகைச் சுவையாகவே கதைப்பார். சந்தோசமும் புன்சிரிப்பும் முகத்தில் தெய்விக களையும் ஒளி விசுகின்ற பார்வையும் உடையவராகவே இருந்தார்.

சமாதி நேரம் நெருங்குவதை உணர்ந்த சுவாமிஜீ 2004.11.19 ஆம் திகதி வருத்தம் அதிகமாயிருக்க மதியம் 1.00 மணியளவில் தனது சீடர்களின் உதவியுடன் முருகன் ஆலயத்தினுள் சென்று முருகனைச் சில மணி நேரம் தரிசித்து விட்டு தனது அறையில் வந்து ஆழ்ந்து தூங்கினார். அன்று பி.பகல் 4.00 மணியளவில் ஆச்சிரமத்தில் சுவாமிகளைத் தரிசிக்க வந்த பக்தர்களை எல்லாம் படுக்கையில் இருந்த படி புன்சிரிப்புடன் அனைவரையும் பார்த்படியே இருந்தார். சரியாக இரவு 2.00 மணிக்கு மரண வேதனை ஆரம்பித்தது. அவ்வேளை அருகிலிருந்தவர்கள் மந்திர சுலோகங்களைச் சொல்லிக் கொண்டேயிருந்தனர். முருகனுக்கு ஆலயம் அமைத்தாலும் முருகனை நாராயணனாகவே வழிபட்ட சுவாமிஜீ மரண வேளையிலும் ஒவ்வொரு மூச்சும் ஓம் நாராயணா என்றே சொல்லிக் கொண்டிருந்தார். இறுதி மூச்சிலும் கூட சுவாமிகளது முகத்தில் தெய்வீக ஒளி வீசிக் கொண்டேயிருந்தது. மறுநாள் 2004 நவம்பர் 20ம் திகதி சனிக்கிழமை சரியாக 6.18 மணியளவில் அருகிலே சீடர்கள் காயத்திரி மந்திரம் உச்சரித்த படி இருக்க சுவாமியின் ஆன்மா ஓம் நாராயணா என்ற மந்திரத்துடன் வெளியேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியின் தேகம் அன்றைய தினம் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட சிவானந்தா ஆச்சிரமத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5.00 மணிக்கு சிவானந்த தபோவனத்தில் பக்தர்களின் அஞ்சலிக்காககவும் வைக்கப்பட்டு மாலை 6.00 மணிக்கு திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் ஈசான மூலையில் சைவ ஆகம முறைப் படி சகல கிரியைகளும் ஒழுங்கு முறைப் படி செய்யப்பட்டு வங்கக் கடலை நோக்கிய படி சமாதி வைக்கப்பட்டது. சுவாமிஜீயின் ஆத்ம ஞான அலைகள் அந்த இடத்திலேயே பாதுகாக்கப்படுகிறது. எதிர் காலத்தில் மக்கள் இதன் மூலம் பெரும் பயனடைவார்கள் என்பது நிச்சயம். சுவாமி சாமதி அடைந்து சரியாக 38ம் நாளில் ஏற்பட்ட ஆழிப் பேரலலைகளின் போது ஆச்சிரமம் ஆலயம் சேததட்திற்கு உள்ளாக்கப்பட்ட போதும் சுாமிஜீயின் சமாதிக்கு எவ்வித சேதமும் ஏற்பபாதது சுவாமஜீயின் ஆத்மீக சக்தியே காரணம் என்று கூறப்படுகிறது.

ஆலயம், ஆச்சிரம் ஆழிப் பேரலையால் அழிவுக்கு உள்ளான போதும் பணிகள் யாவும் சுவாமிஜீயின் கட்டளைப் படி ஆச்சிரம சீடர்களாலும் பரிபாலன சபையினராலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. குரு நாதரின் ஆசிகளும் கர்ம யோக, பக்தி யோக வழி காட்டலும் சிந்தனைத் தெளிவும் உள்ளத்திலே பக்குவமும் கரத்தினிலே தொண்டும் சிறக்கும் வண்ணம் ஊக்கமளிக்கின்றது.

சிவானந்த ஆச்சிரமம், சிதானந்த தபோவனம் ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் போன்றவற்றின் தவயோகி சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதிக்கே எல்லா விதப் பெருமையும் உரித்தாகுக.

ஓதம் நமோ பகவதே ஓம்காராய நம.:.

ஓம் தத் ஸத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் காரா நந்த ஈஸ்வரர் திருப்பள்ளியெழுச்சி

புலரி யெழுந்தான் புருகூதன் திசையில்
புன்மையிருளெல்லாம் போயகன்றன
புற்கரிணிப் புண்டரிகம் புலர்ந்தன
புள்ளுவம் ஒலித்தன புற வெளி யெங்கும்
புலப்பகை அடக்கிய புண்ணிய மூர்த்தியே
துறவிகள் பலர் சூழ்ந்து நிற்கின்றனர்
கடமையில் கண்ணியம் காத்திடு சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

ஆழியலை எழுந்தார்த்தன ஆதவன் கண்டு
பாவவொலி ஒலித்தன ஆலயந் தோறும்
வாவி மீனிம் இசைத்தன யாழிசையாக
ஆவினம் கதறின பால் மடி சுரக்க
கூவின குயிலினம் இரவி யெழுவது கண்டு
சமாதிதனில் துயிலோ ஓங்காரானந்த ஈஸ்வரா
கண்ணுறங்கின்றனையின்னுமேன் சுவாமி
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

செங்கதிர் கண்டு சிலிர்த்தெழுந்தன வாழி மீனினம்
அங்கதைப் பிடிக்க வளைந்தனர் கரைவலை
ஆலயம் சூழ அன்படியார்கள் வந்தன்போடு
பாராயணம் செய்கின்றனர் நாமசங்கீர்த்தனம்
தொண்டர்கள் வந்து சூழ்ந்தனர் சுற்றி
பங்கய வதன ஓம் காரா னந்த ஈஸ்வரரே
இன்னமும் கண் துயிலுதல் தகுமோ
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

ஆலய மணியடித் திசைப்பவர் ஒரு பால்
மெழுகிக் கோலமிடும் மெல்லிய ஒரு பால்
பூவன புட்பம் எடுப்பவர் ஒரு பால்
பூமாலை புனைந்திடு பூவையர் ஒரு பால்
பாவிசைத்திடு பாவாணர் ஒரு பால்
மதி நிறை ஓம் காரானந்த ஈஸ்வரரே
பதி நிறை பக்தரை பயிற்றுவித்த சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

மாந்தர்கள் எழுப்பிட வேந்தனி தூங்கலாமோ?
மனிதம் வளர்த்திட்ட மகானை அறியாயோ
துறவிகள் மொழிக்கு இரங்கிடு தூயவரே
வருவினை போக்கிட வழிகாட்டியவரே
இதமுறவந்தெமை சைத்தன்ய
துறவிகள் பணி ஓம் காரானந்த ஈஸ்வரரே
அற வழி காட்டிய ஐயனே அருளே
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

தெய்வ நெறிக் கழக மெய்ப்பணித்தீரா
சிதானந்த தபோவனச் செம்மலே
திருச்செந்தூர் முருகன் ஆலயம ஸ்தாபக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுடை மகானே செந்தமிழ்ப் பேறே
குரு குலக் கொழுந்தே கொள்கையில் வல்ல
நாராயண பக்த ஓங்காரானந்த ஈஸ்வரரே
காராண முதலே கருத்தினிக்கினிய சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

சீதம் கொள் திருச்செந்தூருறைப் பேறே
பாதங்கள் தொழுது பணிந்துமைப் போற்றி
மற்றவர் தொழுதிடும் மதியுரை மருந்தே
கற்றவர் உணர்ந்த கலங்கரை விளக்கே
முற்று உணர்ந்திடு ஞான சோதியே
மெச்சிடு ஓங்காரானந்த ஈஸ்வரரே
சச்சிதானந்த சீட சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

பங்கயப் பாத ங்களப் பர பிரம்மமே
கந்தவேள் வந்து தங்கப் பதி அமைத்த
திங்கள் ஒளி நிகர் செந்திரு மேனியரே
பொங்கி எழ ஆழி கரை வளங் குவிக்கும்
வங்கக் கடல் பார்த்த சமாதியில் துயில் கின்ற
சத்திய சீல ஓங்காரானந்த ஈஸ்வரரே
முத்தியின் மூல முழு முதற் சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

உறக்கத்தில் கண்ட உயர் கனவதனை
சிறந்திடச் செவ்வனே செயற்படுத்தி முடித்த
தனக்கென வாழாத் தவ ஞானப் பேறே
வனப்பு மிகு திருச்செந்தூர் பதியுறை
குணக்குன்றே ஞாலம் புகழ்ந்தேற்று
சுத்த சித்த ஓங்காரானந்த ஈஸ்வரரே
சித்திரத் தேர் அமைத்த சீரிய சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

மீனிசைக்கும் தேனக ஈழத் திருச் செந்தூரின்
ஞான மணி விளக்காய் நாளும் ஒளிரும்
மட்டு நகருக்கே மட்டற்ற புகழ் சேர்த்த
மாசற்ற மதியாக விளங்கி நிற்கும்
பாச பந்த மறுத்து பாதோர் போற்றிடப்
பவனி வரும் ஓங்காரானந்த ஈஸ்வரரரே
அவனியில் ஆன்மீகப் பூ பூக்க வைத்த சைத்தன்ய
ஓம் காரானந்த சரஸ்வதி பள்ளி எழுந்தருளாயே

**கடிபொருள்:**-புருகூலன்- இந்திரன்(கிழக்கு)
புலரி – கதிரோன் புட்கரிணம்- தாமரை
புள்ளுகம்- பறவையோசை புறவெளி- வானவெளி

✡ ✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி

ஏற்றியெம் வாழ்வில் இரந்தரும் அருளே
மறைந்திடும் இருளை அகற்றிடும் ஒளியே
தேற்றிடுவுன் திரு முகம் பார்த்திடவேங்கி
மலர்க்கரம் குவித்தும் மலரடி பணிந்து
போற்றியே வங்க் கடலலையார்க்கும்
ஈழத் திருச்செந்தூர் உறை சிவ குருவே
சேவற் கொடியுடையா கிழக்கினொளிச்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

ஒற்றைப் பனையமர் இளங்குயில் கூவின
சிற்ப மயிலுருகண்ட மடமயிலகவின
கடலிடைப் பிறந்த சங்கம் இயம்பின
கவினுறு குருகுகள் களித்து இயம்பின
எழுகதிரோன் கதிர்க்கரம் கூப்பிகப்பணிந்திடு
திருச்செந்தூர் உறை சிவகுரு நேசா
அருள் நிதி தந்திடு ஆறு முகத்திருச்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

கதிரவன் கிழக்கை யணுகிடக்காரிருள்
அகன்றிடவுன் அழகாறுமுகத்தின்
ஒளியதுமேவி புவியது காட்ட விழிக்
கடிமலர் மலர வண்டினம் நறுவதுபருக
சிறகலடித்து அணுகிட கூர்வேல்கண்டு
திருச்செந்தூர் உறை சிவகுரு பாலா
ஓடின பேதங்களகல ஆண்டருள் புரியும்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

மட்டு வாவி மீனர மகளீர் பாடிடுமிசையொருபால்
வங்க்கடற் சோபன வாழ்த்தொலியொருபால்
தல விருட்ச பனை மரக் குயிலிசையொருபால்
கை குவித்து மெய்யுருகி வழிபடுபவரொருபால்
சேவை செய்திட தினம் கூடுபவரொருபால்
திருச்செந்தூர் உறை சிவகுரு நேசா
எண்ணத்திலுனையே ஏற்றிடுமெனையாளும்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

பிரணவப் பொருளறியா பிரமனைச் சிறையில்
கருதியே அடைத்து கலங்கிடச் செய்து
தந்தைக்குப் பிரணவப் பொருள் சொன்ன
தந்தைச் சாமி கந்தனேயுன்னை
அறியாத அவுணர் பொரிதிட காலை
திருச்செந்தூர்உறை சிவகுரு பாலா
கைவேல் தன்னால் அறியாமைக் கண் திறந்த
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்க்கிடர் விளைவித்த சூரனகந்தை
வேரொடறுத்த வேலவ வேலா
தேவேந்திர தெய்வ யானையை மணந்த
தேவ சேனாபதியே நீ மனமுவந்து
வள்ளி மான் மேல் துள்ளி மையல் கொண்ட
திருச்செந்தூர் உறை சிவகுரு நேசா
அள்ளி அணைக்க ஆனைமுகன் உதவிய திருச்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

ஈழத்திருச் செந்தூரில் கோயில் கொண்டிட
ஓங்காரனந்த – சுவாமி ஜீ கனவில்
காலாறக் கதிர்காமம் சென்றிட
வேண்டுமெனக்கிங்கோரிடமென்று
தோன்றிக் கூறிய தோகை மயில் வாகன
திருச் செந்தூர்உறை சிவகுரு நேசா
மட்டு நகரில் மகிழ்வுற அமர்ந்த திருச்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

மேற்கு நோக்கிய வாசல் அமைத்ததமர்ந்து பின்
கிழக்கின் உதயம் கண்டிடவமர்ந்த
கோலாகலக் குமர வேல் முருகா
ஆராதனைசெய்தடியார் அனு தினமும்
பாகாய் உருகி பாதம் பணிந்திடு
திருச்செந்தூர் உறை சிவகுரு நேசா
நேராய் வந்துன் திருமுகன் காட்டிட
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

கந்த சஷ்டி விரதம் இருந்தனு தினமும்
கந்த சஷ்டி கவசம் படித்து எந்நாளும்
சிந்தைதன்னில் உந்தனை இருத்தி
வந்திடும் அடியார் தம்மைக் காத்திட
எந்தையே திருக்கை வேல் கந்தா
திருச்செந்தூர் உறை சிவகுரு பரனே
கந்த புராணக் காவிய நாயகத் திருச்
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே

துறவிகள் துதித்துப் பூசை செய்திடு வேளை
உறவோடு வந்து உவந்தேற்றிடும் ஐயா
மடமையிருளில் மனிதம் மயங்கி
உடமைகள் ஒன்றே உயர்வெனக் கருதி
அடிமையாகி அகமது அழிந்திடு நிலை
திருச் செந்தூர்உறை சிவபாலனே
கண்டும் கண்டயர்ந் தூங்காது காக்க
செந்தூரா பள்ளி எழுந்தருளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரு

தானினத் தானினத் தானானத் - தனத்
தானினத் தானினத் தானானம்
தானினத் தானினத் தானானத் - தனத்
தானினத் தானினத் தானானம்

காப்பு

கல்லடி திருச்செந்தூரினிலே
நல்லபடி கோவில் கொண்டமர்ந்த
செந்தூர் முருகன் கும்மி பாடச்
சிறி சித்தி விநாயகர் காப்பாமே

கும்மிப் பாடல்கள்

1. ஓங்காரானந்த ஜீ கனவினிலே
ஒற்றைப் பனை மர நிழலினிலே
வீற்றிருந்த முருகன் விண்டிட்ட
வார்த்தை தன்னைக் கேளுங்களே(ன்)

**2.** கதிர்காமம் சென்றிடு காலையிலே
களைப்பாறி நானமர்ந்து செல்வதற்கு
கட்டிடு கொட்டிலொன்றை யென்று
செந்தூர் முருகனும் செப்பினரே

**3.** தெய்வநெறிக் கழகத் தலைவர்
ஓங்காரானந்தா சுவாமி யமைத்த
சித்தானந்த தபோவனமே
திருச்செந்தூர் முருகன் திருத்தலமே

4. காலைக்கதிரவன் தானெழுந்து
கதிர்க்கரம் கொண்டு க்ழல் பணிந்து
கடமை செய்யும் காட்சி காண
ஈழத் திருச்செந்தூர் வாருங்களே(ன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீல வானில் செக்கச் செவேலெனவே
காலைக் கதிரவன் எழு காட்சி
கோல மயிலிலே திருச்செந்தூரான்
வீற்றிருக்கு மருட் காட்சியதே

6. ஆழியலைகள் தான் மகிழ்ந்து
சோபனங்கள் கூறித் துதிக்கும்
மாட்சிகண்டு மனமுருகி வழிபட
ஈழத்திருச்செந்தூர் வாருங்களே(ன்)

7. தோகை மயிலேறி வேலனவன்
கதிர்காமம் செல்கின்ற காலமதில்
காலாறிச் செல்கின்ற இந்த திருத்தலம்
ஈழத் திருச்செந்தூர் வாருங்களே(ன்)

8. இரண்டாம் படைவீடு திருச்செந்தூரே
ஈழப்படை வீடும் திருச்செந்தூரே
முழுமனதோடு முருகன் வந்தமர்ந்த
ஈழத் திருச்செந்தூர் வாருங்களே(ன்).

9. நீல மயிலேறு கோலாகலன்
ஈழத் திருச்செந்தூர் முருகனென்று
பாவமைத்துப் பண்ணோடு பாடிட
வாருங்களே(ன்) ஒன்று கூடுங்களே(ன்).

10 .ஈழத் திருச்செந்தூர் முருகனடி
ஏதிலார்க்கு உதவிடு வேலனடி
ஓங்காரானந்த சுவாமிகளின்
உள்ளம் கவர்ந்திட்ட கள்வனடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. நட்ட நடு நிசி வேளையிலே
கொட்டு மொளிப் பிளம்பாகவவன்
கோவில் புகுந்து கோலதோட்ச
கலீர்க்கலீரென மணிதானொலிக்கும்.

12 .நற்குஞ்சரன் விரும்பிடு தம்பியவன்
நற்றமிழ் நயந்திடு சுவைஞனவன்
அற்புதம் காட்டிடு விற்பன்னனவன்
பொற்பாதம் பணியமுன் வந்து நிற்பான்.

13. அறுபடை வீடு அமர்ந்தவனே
மாறுபடு சூரர்குல மறுப்பவனே
கூறுமடியார்கள் உள்ளங்களிலே
கோவில் கொண்டு அமர்பவனே.

14. உகந்தமலை உவர்ந்தமர்ந்தவனும்
தாந்தாமலை தரித்திருப்பவனும்
ஆரைநகர் அழகனவனும் ஈழத்
திருச்செந்தூர் முருகனவனே.

15. நல்லூர் பதி யுறை நாயகனே
செல்வச் சந்நிதி செவ்வேளே
சித்தாண்டியுறை சிவபாலனே
செந்தூரானென்று பாடுங்களே(ன்).

16. அமிர்தகழியப்பன் தம்பியடி
ஆனைப்பந்தி யானின் சோதரன்டி
களுதாவளையானின் உடன் பிறப்பே
திருச்செந்தூர் அமரந்தவண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கும்மியடித் தாடவாருங் களே(ன்)
கோலாகலனவன் கோவிலிலே
தித்திக்கக் கைத்தாளம் தட்டுங்களே(ன்)
திருச் செந்தூர் முருகன் ஆலயத்தே.

18. ஊரது கூடுது திருச்செந்தூரிலே
தேரது ஓடுது திரு வீதியிலே
பாடிடு பக்தர்கள் பாவினிலே
கூடுது அவனருள் நொடியினிலே.

19. நீலமயிலேறிச் செந்தூர் முருகன்
வீதியுலா வரும் வேளையிலே
ஆழிக்கட லமிர்தமென மக்கள்
அள்ளியுண்பர் திருவருளமிர்தம் தன்னை

20. வெள்ளையர்கள் வந்து ஏற்றுவதும்
உள்ளத்தால நல்லவர் போற்றுவதும்
துள்ளிவரு வேல் துயர் ஓட்டுவதும்
திருச்செந்தூர் முருகன் திருவருளே.

21. மங்களமே பொங்கும் மங்களமே
எங்கும் தங்கும் மங்களமே
மங்களமே அருள் மங்களமே
திருச்செந்தூர் முருகன் மங்களமே.

✡ ✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் காவடிப் பாடல்கள்

## காப்பு

நீல வானில் நீந்தியெழு பகலோன்
கோலக் கதிர்க்கரம் நீட்டிப் பணிய
தங்கக் கடலலைகள் நுரைப் பூக்கள் சொரிய
சங்கத் தமிழ் பொதிகைத் தென்றல் புகுந்து
வங்கக் கடல் தவழ்ந்து வந்து வளர் விருட்சம்
மோதியிசையமைக்க கிளைகள் நடமாடு.....
ஈழத் திருச்செந்தூரானைப் பாட....
வேழ முக விநாயகனே காப்பதாமே......

✡ ✡

## பாடல்கள்

01. மாசி மகா சிவராத்திரிக்கு முன்னிரவு
ஆசி நிறை சிவாநந்த ஆச்சிரமம் தன்னில்
ஆழ் துயிலில் அயர்ந்திருந்த சுவாமி
ஓங்காரானந்தா உன்னத கனவில்
சிங்காரசச் சிதானந்த தபோவனத்தில்
பாங்கான ஒற்றைப் பனை மரத்தின் கீழே....
நேர்த்தியா யமர்ந்திருந்த துறவியிடத்தே.....
வார்த்தையாய்க் கேட்க விடை பகர்ந்தனரே....

02. வலக் கரம் நீட்டிக் கடலைக் காட்டி
அலைக் கடலுக்கப்பாலேயுள்ள
இரண்டாம் படைவீடு திருச் செந்தூரிருந்து
இவ்வழியால் கதிர்காமம் செல்லும் போது
ஓய்வெடுத்து உடல் நிமிர்த்தி யுட்கார்ந்து
சில நாட்களிலிருந்து நான் செல்வதற்கு.
நீக்கமற இவ்விடத்தில் நீயெனக்கு.
ஓலைக் கொட்டிலமைத்து வையென்றாரே

03. கட்டளையைக் கட்சிதமாய் முடிப்பதற்கு
கைவசமிருந்த கல்லில் உருவடிவமைத்து
மேடையமைத்து கல்லை நிறுவி அபிடேகித்து
முறைப்படி முருகனுக்கு பூசையியற்றி வர
ஓலையால் கோவில் கட்டி வேலொன்று செய்து
சுத்தானந்தா பாரதியார் பிரதிஸ்டை செய்து
பூசை செய்ய அன்று முதழீழத் .
திருச்செந்தூர் முருகனாலய மானதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஆயிரத்து தொளாயிரத் எண்பதிலே
ஆடித்தளம் இட்டுத் துவித தளவிமானமோடு
கற்பக் கிரக அர்த்த மகா நிமிர்த்த
தம்ப மண்டபங்கள் எழிலுறவமைத்து
முருகன் திருவுரு வாலய தோற்றமும்
முகப்பினிலே வரைந் தோவியர் சென்று
மீண்டும் வந்து பார்க்கையிலே கண்களிரெண்டும்.
திறந்திருக்கக் கண்டு மக்கள் வியந்தனரே

05. முருகன் மகிமைதனை யறிந்து போற்றி
ஆண்டு தோறும் கண் திறந்த விழா
கொண்டாடி வெகு விமர்சையாக
எண்பத்திநான் கிரண்டு ஐந்ததனில்
மகா கும்பாவிடேகம் செய்து வைத்து
இந்து மதத் துறவிகளே பூசையியற்ற
சாதிமத பேதமின்றிச் சகலருமே
மூலஸ்தான நேர்முக தரிசனம் செய்கின்றனரே

06. விசேட தினங்களிலே அனைவருமாலயத்தே
நேரடியாக அர்ச்சனை செய்வதற்கும்
அபிடேகிக்க பூரண கும்பமோடு
அனைத்துக் கும்பங்களையும்
மூலஸ்தானத்திற்கு ஒழுங்கு முறையாக
எடுத்துச் செல்வதற்கு அனுமதித்து
செந்தமிழில் அர்ச்சனைகள் செய்ய
செந்தூரா நீ மகிழ்ந்தருள் அளிக்கின்றாயே

07. தேர்த் திருவிழாவொன்று செய்வதற்கு
தேரொன்று இல்லையென்ற குறை போக்க
ஓங்காரானந்தா சுவாமி தினமும்
ஓயாது எடுத்த அயராத முயற்சியாலே
ஈராயிரத்து இரண்டாம் ஆண்டினிலே
இணையற்ற எழில் வண்ணச் சித்திர
சிற்பத் தேரோன்று நிர்மாணிக்கப்பட்டு
அற்புதமாயத் தேர்த் திருவிழா செய்தனரே

08. ஈராயிரத்து நான்காமாண்டு மார்கழி மாதம்
ஆழிப் பேரலை யெழுந்தாடிய
ஊழித் தாண்டவக் கூத்தினாலே
ஆலயத்திலேற்பட்ட சேதம் போக்க
பொங்கு கடல் நோக்கி வாயில் வைத்து
புதுப்பொலிவுடனே வாலயமமைத்து
ஈராயிரத்துப்பத்து ஆறு இருபத்து மூன்றில்
மகா கும்பாபிடேகம் பெற்ற செந்தூரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. ஈழத் திருச்செந்தூர் ஆலயம் சென்றோம்
இணையற்ற எழிலுற்ற கடல் பார்த்த
கற்பக் கிரக அர்த்த மகா நிர்த்த
. மண்டபங்களோடு கொடித் தம்ப
விநாயகரை விருப்புடனே வணங்கி நின்றோம்
பலிபீட மயூர வடிவங் கண்டோம்
திருச்செந்தூர் முருகன் திருவடிவமுங்கண்டோம்
அவரருகே சிவலிங்கமும் கண்டோம்

10. வாகன சாலை வாகனங்கள் கண்டோம்
மாண்புறு சித்திரத் தேரும் கண்டோம்
ஆலய ஈசான மூலையிலே நெடிதுயர்ந்து
சாகரம் நோக்கித் தலைநிமிர்ந்த
ஓங்காரானந்த சுவாமி துயிலுகின்ற
சமாதியின் தாட்சன்யம் கண்டோம்
மேடையில் ஆவுடையாரோடமைந்தழகு
வளர்சியுறு லிங்கம் கண்டு வணங்கினோமே

11.ஆழிப் பேரலையால் அழிவுறாது
இரண்டாம் படை வீட்டிலிருந்து கதிர்காமம்
செல்ல வந்த திருச்செந்தூர் முருகன்
ஓய்வெடுக்க வமர்ந்திருந்த ஒற்றைப்
பனை மரத்தின் பாங்கான நேர்த்தி கண்டோம்
தபோவனத்தில் தலை நிமிர்ந்து நின்று
தழைத்தோங்கு தருக்களசைந்து
தலை வருடித் தாலாட்டும் தென்றல் கண்டோம்

12. ஆறு வருடங்களின் பின்பு முன்போல
ஆவணித் திங்கள் கொடியதேற்றி
எட்டு நாட்கள் திறமையான திருவிழாவும்
ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழாவும்
பத்தாம் நாள் பௌர்ணமியில் தீர்த்தமாட
செந்தூரான் சாகரம் சென்று மீண்டு
தபோவனத்தே சகலரும் சந்தோசமாக
அன்னதானமுண்டு அகம் மகிழுவாரே..

13. சுட்ட பழமீர்ந்தவ்வை தமிழ் சுவைத்தாய்
மட்டில்லா வசுரர் படை மாழவைத்தாய்
தந்தைக்கே சுவாமி மலையில் உபதேசித்தாய்
சுந்தரி வள்ளிக்காய் வேங்க மரமாகி நின்றாய்
தந்திரமாக தேன் தினை மாவுண்டு விக்கித் தாகமென்றாய்
தந்தி முகன் துணையோடு மணமும் கொண்டாய்.
கலியுக கந்தனே நீ கருணை கொண்டு .
திருச்செந்தூரமர்ந்தருளு கின்றாயய்யா

✡ ✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துத் திருச்செந்தூர் பக்திப் முருகன் பாடல்கள்

**1.** ஈழத் திருச் செந்தூரான் சன்னிதி
அளிக்கு மீடுயிணையற்ற நிம்மதி
எண்ணவெண்ண உள்ளமது தித்திக்கும்
வண்ணவண்ண வடிவழகு சித்திக்கும்
எண்ணவெண்ண உள்ளமது தித்திக்கும்
வண்ணவண்ண வடிவழகு சித்திக்கும்
போய் வந்து பாரு - ஐயா
போய் வந்து பாரு
போய் வந்து பாரு - ஐயா
போய் வந்து பாரு (ஈழத்திருச்...)

வங்கக் கடலலை வாழ்த்தொலி
சங்க மிக்கத் தென்றல் கை குலுக்குமே
பொங்கு மகிழ்வால் விருட்சம் நடமிட
எங்கும் காற்றலைமேவிப் பக்தி மின் பரவுமே (ஈழத்திருச்...)

செந்தூர் முருகன் திவ்விய ஒளி
அங்கம் தடவ வகம் மகிழுமே
ஓங்காரானந்தா வருள்வாக் கொலி
சிங்காரமாய் மோதிச்செவிக் கினிக்குமே (ஈழத்திருச்...)

சித்திரத் தேரின் திருவுருவங்கள் நம்
சிந்தைக்குத் திகட்டா விருந்தளிக்குமே
பக்தி தரு பாராணயப் பாட்டொலி
புத்திதெளிய வழிகாட்டு மருந்தாகுமே (ஈழத்திருச்...)

2. பனைமர ஓலையமர்ந்து
பாலமுருகன் தனைப் புகழ்ந்து
கோகிலங்கள் கூடி ஒன்றாய்க் கூவுது
ஆழியலைகள் எழுந்து
ஆறுமுகனை நினைந்து
சோபனங்கள் சொல்லி வாழ்த்துக் கூறுது (பனை...)

ஓங்காரானந்தா அமைத்த சன்னிதி
ஆங்காரமகற்றி யளிக்கிறது நிம்மதி
வாருங்க வழிபடுங்க நம்பியே
சேருமெங்க திருவருள் பொங்கியே
வாருங்க வழிபடுங்க நம்பியே
சேருமெங்க திருவருள் பொங்கியே என்று
கோகிலங்கள் கூவுது
சோபனங்கள் கூறுது. (பனை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபடை வீடமர்ந்த ஆறுமுகனே-ஈழத்
திருச்செந்தூருறை சிவபாலனே
தேரோட்டத் திருவிழா வந்து பாருங்க - மனப்
போராட்டம் ஓடிப் போகுங்க
தேரோட்டத் திருவிழா வந்து பாருங்க - மனப்
போராட்டம் ஓடிப் போகுங்க என்று
கோகிலங்கள் கூவுது
சோபனங்கள் கூறுது. (பனை...)

கற்பக்கிரகம் உடைத்துக் காத்த முருகன்
அற்புதச் சோதியின்றும் காட்டும் முருகன்
பொற்பதம் பணிவோர்கருளும் முருகன்
நற்பதம் காண நாடியிங்க வாருங்க
பொற்பதம் பணிவோர்கருளும் முருகன்
நற்பதம் காண நாடியிங்க வாருங்க என்று
கோகிலங்கள் கூவுது
சோபனங்கள் கூறுது. (பனை...)

03. தேரு! தேரு! தேரு!
திருச்செந்தூர் முருகன் தேரு!
பாரு! பாரு! பாரு!
வண்ண வடிவழகு பாரு!
கூறு!கூறு! கூறு!
செந்தூரான் திருப்புகழ் கூறு!
கூடும்! கூடும்!கூடும்!
திருவருள் வந்து கூடும். (தேரு...)

ஓங்காரா னந்தா சரஸ்வதி நாமம்
நீங்காதிருக்கும் தேரு
பாங்காய் செந்தூர் - முருகன்
வரலாறு கூறும் தேரு
ஆங்காரமகற்ற நாளும்- மனம்
பூங்காவனமாக மாறும் ( தேரு...)
வங்கக் கடல் வாழ்த்த
சங்கமிக்கும் தலவிருட்சத்
தென்றல் சுருதி மீட்க
மட்டுவாவி மீன் கானமிசைக்க
தட்டும் மேளவிசைக் கேற்ப
நடமாடியோடும் தேரு ( தேரு...)

பாவாணர் பாடலினிக்க
நாவாணர் வாழ்த்துச் சிறக்க
தேவார பாராயணம் ஒலிக்க
நாம சங்கீர்த்தனம் முழங்க
தேரிலேறி திருச்செந்தூரான்
நேரில் திருக்காட்சியளித்துவாற (தேரு...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பொழுதெழுந்து தொழுது செல்லும்
செந்தூர் முருகனை
வழுவாது வணங்க ஓடி மறையும்
துன்ப துயரமே
நழுவாது நாடி வந்து சேரும்
நன்மைகள் நம்மையே
வழிபடுவோமே அருள் பெறுவோமே
வழிபடுவோமே அருள் பெறுவோமே

திருச்செந்தூர் முருகா - ஈழத்
திருச்செந்தூர் முருகா
திருச்செந்தூர் முருகா- ஈழத்
திருச்செந்தூர் முருகா (பொழுது...)
அருண கிரி திருப்புகழில் மணப்பவர்
குருபரர் கலி வெண்பாவில் சுவைப்பவர்
திருமுருகாற்றுப் படையில் திகழ்பவர்
கிருபாநந்தவாரியார் குருவாய் நின்றவர்
வழிபடுவோமே அருள் பெறுவோமே
வழிபடுவோமே அருள் பெறுவோமே
திருச்செந்தூர் முருகா- ஈழத்
திருச்செந்தூர் முருகா
திருச்செந்தூர் முருகா- ஈழத்
திருச்செந்தூர் முருகா (பொழுது...)

ஓங்காரானந்தா சுவாமி உள்ள முறைந்தவர்
ஔவைப் பிராட்டி செந்தமிழிலினிப்பவர்
நீங்காத நீல மயில் வாகனர்
சிருங்கார வள்ளி தெய்வானை பாகனர்
வழிபடுவோமே அருள் பெறுவோமே
வழிபடுவோமே அருள் பெறுவோமே
திருச்செந்தூர் முருகா- ஈழத்
திருச்செந்தூர் முருகா
திருச்செந்தூர் முருகா- ஈழத்
திருச்செந்தூர் முருகா (பொழுது...)

ஆக்கம்:- கவிஞர், ஆரையூர் அருள்
(கீர்த்தி சிறி, சமாதான நீதவான்

✡ ✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் செந்தூர் முருகன் பாடல்கள்

01. சித்திரத்தேர் ஏறிச் சித்திரத்தேர் தேர் ஏறி
திருச் செந்தூர் முருகா வாராயோ!
சக்தி வேல் முருகா சக்தி வேல் முருகா
நித்திலத்தில் நிறைந்த அருள் தாராயோ!

02. ஈழச் செந்தூர் முருகா ஈழச் செந்தூர் முருகா
வேளை தோறும் வினையறுக்க வாராயோ!
ஓம்காரானந்த ஜீ ஓம்காரானந்த ஜீ
பாங்காயமைந்த தேரேறி பாவ வினை போக்காயோ!

03. புள்ளி மயிலேறிப் புள்ளி மயிலேறி
வள்ளி வடிவேலா வாராயோ!
துள்ளிடும் வேலோடு துள்ளிடும் வேலோடு
துன்ப துயர் தீர்த்துக் காராயோ!

04. கதிர்காமம் உறை கதிர்காமம் உறை
கதிர்வேலா காத்திட வாராயோ!
உயிர் போகு முன்னே உயிர் போகு முன்னே
உந்தன் திருவடி தரிசனம் தாராயோ!

05. சூரசங்காரனே சூரசங்காரனே
வீர வேலேந்தி வாராயோ!
கலியுகக் கந்தனே கலியுகக் கந்தனே
பழி பாவம் அகற்றிக் காராயோ!

06. குன்றுதோராடிடு குன்றுதோராடிடு
குமரேசா மயிலேறி வாராயோ!
நின்று வாட்டிடு துயரை வாட்டிடு துயரை
துண்டாக்கி ஓட்டியே காராயோ!

07. அமரர் துயர் களை அமரர் துயர் களை
குமர குருபரா வாராயோ!
மமதையுறு மனிதம் மமதையுறு மனிதம்
திருந்திட நல்வழி காட்டாயோ!

08. தாந்தா மலையுறை தாந்தா மலையுறை
தங்க வடிவேலா வாராயோ!
சாந்த சரவணா சாந்த சரவணா
பாந்தமுடன் எம்மைக் காராயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நல்லூர் மயூரனே நல்லூர் மயூரனே
நில்லாது ஓடியிங்கு வாராயோ!
தொல்லை தரு வினை தொல்லை தரு வினை
எமையணுகாது காராயோ!

10. மண்டூர்ப் பதியுறை மண்டூர்ப் பதியுறை
தண்டாயுதபாணி வாராயோ!
வண்டமிழிலுனை வண்டமிழிலுனை
வாழ்த்திட வல்லமை தாராயோ!

11. ஆரைநகர் உறை ஆரைநகர் உறை
அழகு கந்த வேளே வாராயோ!
பாகாய் இனித்திடு பாகாய் இனித்திடு
பைந்தமிழ்த் திருப்புகழ் கேளாயோ!

12. சித்தாண்டி தனில் வாழ் சித்தாண்டி தனில் வாழ்
சித்தர வேலா நீ இங்கு வாராயோ!
சித்தம் தெளிந்திட சித்தம் தெளிந்திட
சக்தி வேலா நோயதைப் போக்காயோ!

13. உகந்தை மலைதனில் உகந்தை மலைதனில்
உறைந்திடு முருகா வாராயோ!
அகந்தையகற்றி அகந்தையகற்றி
நலந்தனை எமக்குத் தாராயோ!

14. கல்லடிப் பதியுறை கல்லடிப் பதியுறை
வள்ளி மணவாளா வாராயோ!
நல்ல படி வாழ நல்ல படி வாழ
வல்வினை போக்கிக் காராயோ!

15. வெருகலம்பதிவாழ் வெருகலம்பதிவாழ்
வேல்முருகா இங்கு வாராயோ!
வெவ்வினை போக்கி வெவ்வினை போக்கி
உய்வினை எமக்குத் தாராயோ!

✡ ✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் செந்தூர் முருகன் பஜனைப் பாடல்

| | | |
|---|---|---|
| 01. | அத்திமுகன் தம்பியடி | ஈழச் செந்தூர் முருகன் |
| | அறுமுகன் அருளளிப்பான் | அழகு மயிலேறி |
| | அத்தனனருள் குமரன்னலோ | ஈழ செந்தூர் முருகன் |
| | அசுரகுண மழிப்பான் | புள்ளி மயிலேறி |
| 02. | ஆயன்மருகனடி | ஈழச் செந்தூர் முருகன் |
| | ஆதரித்துக்காத்திடுவான் | தோகைமயிலேறி |
| | ஆண்டிப்பண்டாரமடி | எங்க செந்தூர் முருகன் |
| | ஆசையகற்றிடுவான் | தங்க மயிலேறி |
| 03. | இலம்போதரன் தம்பியடி | ஈழச் செந்தூர் முருகன் |
| | இகபர சுகமளிப்பான் | அழகு மயிலேறி |
| | இலளிதை மைந்தனடி | எங்க செந்தூர் முருகன் |
| | இன்னலகற்றிடுவான் | வண்ணமயிலேறி |
| 04. | ஈடில்லா எழிலழகனடி | ஈழச் செந்தூர் முருகன் |
| | ஈன்றிடுவான் முத்திதனை | பீலிமயிலேறி |
| | ஈஸ்வரியாள் புதல்வனடி | எங்க செந்தூர் முருகன் |
| | ஈனோர்க்கும் இரங்கிடுவான் | தங்க மயிலேறி |
| 05. | உலகளந்தோன் மருகனடி | ஈழச் செந்தூர் முருகன் |
| | உள்ளக ஒளியாயிடுவான் | அழகு மயிலேறி |
| | உமைஈன்ற மைந்தனடி | எங்க செந்தூர் முருகன் |
| | உன்னலரை ஒறுத்திடுவான் | வடிவுமயிலேறி |
| 06. | ஊழியான் குமரனடி | ஈழச் செந்தூர் முருகன் |
| | ஊழ்வினையறுத்திடுவான் | பீலிமயிலேறி |
| | ஊகையளித்திடுவான் | ஈழ செந்தூர் முருகன் |
| | ஊரறுத்து உதவிடுவான் | வண்ணமயிலேறி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. எளினன் தலை வணங்கு    ஈழச் செந்தூர் முருகன்
எதிரி தலை அறுப்பான்    தோகைமயிலேறி
எண்குணத்தான் புதல்வனடி    எங்க செந்தூர் முருகன்
எதிரே வந்து நின்றிடுவான்    தங்க மயிலேறி

08. ஏகதந்தன் தம்பியடி    ஈழச் செந்தூர் முருகன்
ஏக்கற்வு போக்கியாழ்வான்    புள்ளிமயிலேறி
ஏகன் புதல்வனடி    எங்க செந்தூர் முருகன்
ஏணாப்பு ஓட்டிடுவான்    வண்ணமயிலேறி

09. ஐங்கரன் தம்பியடி    ஈழச் செந்தூர் முருகன்
ஐசுவரியம் அளித்திடுவான்    புள்ளிமயிலேறி
ஐமுகன் பாலமுனடி    எங்க செந்தூர் முருகன்
ஐயமகற்றிடுவான்    தங்க மயிலேறி

10. ஒகரவாகனடி    ஈழச் செந்தூர் முருகன்
ஒட்டாரம் போக்கிடுவான்    அழகு மயிலேறி
ஒளிறு வடிவானவனடி    எங்க செந்தூர் முருகன்
ஒற்கமகற்றிடுவான்    தங்க மயிலேறி

11. ஓம் சக்தி மைந்தனடி    ஈழச் செந்தூர் முருகன்
ஓடி வந்து உதவிடுவான்    பீலி மயிலேறி
ஓதுவார் துணையாவான்    எங்க செந்தூர் முருகன்
ஓதிலால் ஓடி வருவான்    தங்க மயிலேறி

12. கதிரமலை உறைபவனடி    ஈழச் செந்தூர் முருகன்
கடும் பிணி களைந்திடுவான்    அழகு மயிலேறி
கதிர்காமக்கந்தனடி    எங்க செந்தூர் முருகன்
கைகொடுத்துக் காத்திடுவான்    வண்ணமயிலேறி

13. சத்தன் தனையனடி    ஈழச் செந்தூர் முருகன்
சந்தோசம் தந்திடுவான்    அழகு மயிலேறி
சண்முகனானவனடி    எங்க செந்தூர் முருகன்
சந்தாப மோட்டிடுவான்    சுந்தர மயிலேறி

14. தண்டாயுதபாணியடி    ஈழச் செந்தூர் முருகன்
தக்காரக்குதவிடுவான்    புள்ளி மயிலேறி
தங்கலர் பகைவனடி    எங்க செந்தூர் முருகன்
தகுவர் குலமழிப்பான்    தங்க மயிலேறி

15. நடேசன் மகனடியோ    ஈழச் செந்தூர் முருகன்
நடலை ஒளித்திடுவான்    ஆடும் மயிலேறி
நவயுகக் கந்தனடி    எங்க செந்தூர் முருகன்
நலமளிக்க வருவானடி    வண்ண மயிலேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பசுபதி மைந்தனடி
பாவ வினை போக்கிடுவான்
பகவதி புத்திரனடி
பட்டிமை ஓட்டிடுவான்
ஈழச் செந்தூர் முருகன்
பீலி மயிலேறி
எங்க செந்தூர் முருகன்
தங்க மயிலேறி

17. மகவான் மகனடியோ
மடமை அகற்றிடுவான்
மகதி மைந்தனடி
மங்களம் அளித்திடுவான்
ஈழச் செந்தூர் முருகன்
அழகு மயிலேறி
எங்க செந்தூர் முருகன்
தங்க மயிலேறி

18. யட்சிணி புத்திரனடி
யதார்த்தமாய் அருள்வான்
யசசு படைத்தவன்டி
யதியாகிக் காத்திடுவான்
ஈழச் செந்தூர் முருகன்
பீலி மயிலேறி
எங்க செந்தூர் முருகன்
தங்க மயிலேறி

19. வரனார் மைந்தனடி
வண்டோரை வென்றிடுவான்
வள்ளி மணவாளனடி
வன்கண் களைந்திடுவான்
ஈழச் செந்தூர் முருகன்
அழகு மயிலேறி
எங்க செந்தூர் முருகன்
தங்க மயிலேறி

20. வாரணன் தம்பியடி
வாய்மை காத்திடுவான்
வாக்கியை மைந்தனடி
வாதை தணித்திடுவான்
ஈழச் செந்தூர் முருகன்
பீலரிமயிலேறி
எங்க செந்தூர் முருகன்
தங்க மயிலேறி

ஊகை – கல்வி

எகினன் - பிரமன்

யட்சினி – பெண் தெய்வம்

யசசு - புகழ்

யதி – துறவி

வரனார் - கடவுள்

வண்டோர் - தீயோர்

வன்கண் - கொடுமை

வாக்கியை – பார்வதி

✡ ✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org